கின்றன. குறிப்பிட்ட பேருந்துகளில் அப்படி ஏதாவது தவறுகள் இருப்பதை உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. வி.கொ. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து கோவை செல்லுகின்ற வண்டிகள், பவானி, சித்தோடு, அவினாசி மூலமாக கோவை அடைவதும், அல்லது ஈரோடு, பெருந்துறை, அவினாசி மூலமாக கோவை அடைவதும், அதேபோல் ஈரோடு வருகின்ற பஸ்கள் கோபிசெட்டிப்பாளையம், சத்தியமங்கலம் வழியாக கோவை செல்லுவதற்கும் புதிய ஏற்பாட்டை அரசு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, துரித வண்டிகளினுடைய வருவாயைப் பெருக்குகின்ற வகையில் அது அமைய வேண்டும். அது முடியுமா, முடியாதா என்பதைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பெண்ணை ஆற்றின் கரைகள்.

* வினா எண். 232— திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மிகவும் தாழ்வாக உள்ள பெண்ணை ஆற்றின் கரையினை காவனூர் என்ற ஊரிலிருந்து பகண்டைவரை உயர்த்தி ரிவிட்மெண்ட் கட்டி பலப்படுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம். பெண்ணை ஆற்றின் வலது கரையில் வீராணம் குழாய் கடக்கும் இடத்திற்கும் குமாரமங்கலம் தலைமதகுக்கும், இடைப்பட்ட தூரத்தில் கரையை வலுப்படுத்த ரூ. 4·67 லட்சத்திற்கும், பெண்ணையாற்றின் வலதுகரையில் வீராணம் குழாய் கடக்கும் இடத்திற்கும் மேற்கே உள்ள கரையை பலப்படுத்த ரூ. 3·85 லட்சத்திற்கும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. தவிர பகண்டை கிராமத்தின் அருகே பெண்ணையாற்றின் வலது கரையை சீரமைக்க ரூ. 4·85 லட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அது தல அலுவலர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, நான் கூறியுள்ள காவலூர் என்ற ஊரிலிருந்து பகண்டைவரை பெண்ணையாற்றின் தென்புறம் பூராவும், பள்ளமாக இருக்கின்ற காரணத்தால், வெள்ளம் வருகின்றபோது பல கிராமங்கள்

மூழ்கப்படுவதோடு மட்டுமல்ல, ஜனங்கள் அதனால் அவதிப்படுவது மட்டுமல்ல, நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலமும் பாதிக்கப்படுகின்ற காரணத்தினாலே, அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் ஆய்வில் இருப்பதாகச் சொன்னாலும், உடனடியாக மீண்டும் ஒரு வெள்ளம் வருவதற்கு முன்பாகத் துரித நடவடிக்கையை எடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

என். என். கண்டிகை குடியிருப்பு.

* வினா எண். 233— திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாலங்காடு ஒன்றியத்தைச் சேர்ந்த என். என். கண்டிகையில் காலனி வெள்ளத்தால் பாதிக்காமல் இருக்க அங்குள்ள ஆற்றங்கரைக்கு துரிக்கல் கட்டும் யோசனை இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பாலாறு—பொருந்தலாறு துணைக்கால்வாய்

* வினா எண். 234— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனித் தாலூகாவிலுள்ள பாலாறு—பொருந்தலாறு அணையிலிருந்து வெட்டப்படும் வாய்க்கால் வேலை சமீப காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.